உ

கணபதி துணை.

திருவருணைக் கலம்பகம்

மூலபாடம்.

இஃது-சைவ,

எல்லப்பநாவலரால்

அருளிச்செய்தது.

சிதம்பரம்

கருணாநந்தசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டு,

சிந்தாத்திரிப்பேட்டை

நெல்லூமண்டி

வெங்கட்டராமமுதலியாரவர்கள்

குமாரராகிய

கேசவமுதலியாரவர்களது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பிங்கள௵ - மாசிமீ.

மோப்பேர், சாமிநாய்க்கர் - வீதியில் - நெம்பர்- ௫௩.

உ

கணபதி துணை.

திருவருணைக் கலம்பகம்

மூலபாடம்.

காப்பு.

(நேரிசைவெண்பா.)

அன்னவயல்சூழருணையண்ணாமலையார்மேன்
மன்னுங்கலம்பகப்பாமாலைக்குத்— துன்னியசீர்
மெய்க்கோட்டுமருப்பெனும்வெள்ளேட்டின்மீதெழுதுங்
கைக்கோட்டுவாரணமே காப்பு

(கட்டளைக்கலித்துறை.)

சைவத்தின்மேற்சமயம்வேறிலையதிற்சார்சிவமாந்
தெய்வத்தின்மேற்றெய்வமில்லெனுநான்மறைச்செம்பொருள்வாய்
மைவைத்தசீர்த்திருத்தேவாரமுந்திருவாசகமு
முய்வைத்தரச்செய்தநால்வர்பொற்றாளெம்முயிர்த்துணையே

(மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.)

இரு-எட்டடித்தரவு.

மணிகொண்டநெடுங்கடலில்விழிவளருமாதவனு
மணிகொண்டபுண்டரிகமலாசனசதுமுகனு
முனைக்கண்ணுதுகொண்டுநாடுமாறுணராதே
ஏனத்தின்வடிவாகியெகினத்தின்வடிவாகி
அடிதேடியறிவலெனவவனியெலாமுழுதிடந்து
முடிதேடிவருவலெனமூதண்டமிசைப்பறந்தும்
காணரியவொருபொருளாக்களங்கமறவிளங்குபெரும்
சோணகிரியெனநிறைந்தசுடரொளியாய்நின்றருள்வாய்

(இவை — ஈரடித்தாழிசை - ஏழு.)

மலைமிசையிலிருப்பதற்கோமலைசிலையாவெடுப்பதற்கோ .... *
மலையனாயன்மகிழ்வதற்கோமலையுருவமெடுத்தனையே .... * ௧.

இத்தலத்திலைந்தொழிலுமிருபிறப்போராறுதொழிலுந் .... *
தத்துவமுந்திருமேனிதரித்திலையேதியலாவே .... * ௨.

இருக்காதிசதுர்வேதமிசைப்பதுநின்பலபேத .... *
மொருக்காலுமொன்றுரைத்ததொன்றுரைப்பவறியாதே ..... * ௩.

கருமுடிவைத்தருகாலகற்பமெலாங்கடக்கவுநின் .... *
திருமுடியிற்பிறைசிறிதுந்தேயாதுவளராதே .... * ௪.

தானவரைக்கடிந்துமலர்ச்சதுமுகனையொழித்துமற்றை .... *
வானவரையழித்துநின்கைமழுப்படைவாய்மழுங்காதே .... .. * ௫.

அண்டருக்குமுனிவருக்குமழலானகொடுவிடத்தைக் .... *
கண்டமட்டுநுகர்ந்திடவுங்கண்டமட்டிற்கடவாதே .... * ௬.

மூவாமைதனக்குநின்றன்முதனடுவீறிலாதமைக்குஞ் .... *
சாவாமைபிறவாமைதனக்குமிவைசான்றன்றே .... * ௭.

தடவரைநடைசெழுதரமெனவருமொரு .... *
கடகரியுரிவிரிகலைமயனமருவினை .... *
படமுடையரவொடுபகைபடுமுடியெதி .... *
தடையறவுடனுறைசடைநெடுமுடியினை .... *

இவை நாற்சீரோரடியிரண்டு கொண்ட அம்போதரங்கம்-இரண்டு,

சிலையெனமலையைவளைத்தனை .... *
திரிபுரமெரியநகைத்தனை .... *
கலைமறையிவுளிபடைத்தனை .... *
கதிரவனெயிறுபுடைத்தனை .... *

இவை முச்சீரோரடி அம்போதரங்கம் நான்கு,

விதிசிரத்தினை - அகழ்கரத்தினை .... *
விடைநடத்தினை - பொருநடத்தினை .... *
நதிதரித்தனை - மதிபரித்தனை .... *
நாள்களாயினை - கோள்களாயினை .... *

இவை இருசீரோரடி அம்போதரங்கம் எட்டு,

பண்ணுநீசுவையுநீபரிதியுநீபனிக்கதிர்நீ... * } க.
பெண்ணுநீயாணுநீபேதமுநீயபேதமுநீ ... *
செங்காலிற்கருங்காலன்சிரமுருளவுதைத்தனையே * } உ.
சங்காழிமுகுந்தனுக்குச்சங்காழிகொடுத்தனையே *
ஆராலுமளவிடுதற்கரியவுனையொருகரத்து ... * } ௩.
நீராலுமலராலுநெஞ்சுருகப்பணலாமே ..... *

இவை பெயர்த்தும் ஈரடித்தாழிசை மூன்று.

எனவாங்கு—(இது—தனிச்சொல்)

வேற்றுமருந்தால்விடாதவெம்பிறவியை ... *
மாற்றுமருந்தால்மலைமேன்மருந்தா ... ... *
அழகியநாயகியருளுடைநாயகி .... *
பழுகணிநாயகிபொருந்தியபுனிதா ... ... *
காசியிலிறந்துங்கமலையிற்பிறந்தும் ... ... *
தேசமர்தில்லையுட்டிருநடங்கண்டும் ... *
அரிதினிற்பெறும்பேறனைத்தையுமொருகாற் ... *
கருதினர்க்களிக்குங்கருணையைவிரும்பி ... ... *
அடைக்கலம்புகுந்தனனடியேன் ... ... *
இடர்க்கடல்புகுதாதெடுத்தருளனவே ... (க)

இது பத்தடி நேரிசையாசிரியச்சுரிதகம்

(நேரிசைவெண்பா)

வேதநுவல்சோணகிரிவித்தகர்க்கார்வேறுவார்... .... *
சோதியியமானனிவர்சோமனிவ-ராதவனும் ... ... *
மண்ணுங்காலும்புனலும்வானுமழலுமிவர் ... . *
விண்ணுங்காலெல்லா மிவர் ... ... (உ)

(கட்டளைக்கலித்துறை)

எல்லாவுயிர்க்குமுயிரருணேசரிவரசைவின் .... *
அல்லாதணுவுமசையாதவென்பதறிந்தனமே ... ... *
வில்லாடன்மாரனிருக்கவும்யோகம்விளைத்தவந்நாள் ... . *
புல்லாதிருந்தனவெல்லாவுயிருந்தம்போகத்தையே ... ...(௩)

(கலித்துறை)

போகம்விடுத்தேதாகமெடுத்தேபுவிமீதே .... *
யோகம்விளைத்தேயாகம்விளைத்தேயுழல்வீர்கள் ... . *
ஆகமவிர்த்தார்மோகமவித்தாரருணேசர் .... *
கோகனகத்தாளாகநினைத்தேகுழைவீரே ... . (௪)

திருவருணைக்கலம்பகம்.

(அறுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்)

குழைபடுத்த விழியிடத்தர் மழுவலத்த ரருணையத்தர் குளிர்வெற்பூடே *
மழைபடுத்த குளிர்நனைக்க மடிசுருக்கி மயிர்பொடித்து வருந்துஞ் சேதா
தழைபடுக்க விடைபார்பற்று குழவிசைக்கு மனமுருக்கித் தளரு மாலை *
பிழைபடுத்த மொழியுரைத்த கலைவருக்கு மிகவிரக்கம் பிறப்பியாதே (௫)

(எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.)

யாதவர்குலத் துநெடு மாதவன்மருப்புடைய வேனமுருகத் துருவமா *
வேதமொழிபெற்றவயனோதிமமெனப்பறவை வேடமுமெடுத்தகிலையா
ஓதருணைவித்தகனை மூவரிலொருத்தனென வோதியிடுமற்ப மதியீர் *
நீதமதில்வைத்தமுடி பாதகமலமாச்சிறிது தேடுக நினைத்த பரமே. (௬)

(எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.)

பரவையாடினு நதிகளாடினும் படியெலாநடந் தடிகடேயினும் ......*
குரவராயினுங் கனலினின்றதன் கொதிபொறுக்கினுங் கதி கிடைக்குமோ
அரவமாடுசெஞ் சடிலசங்கர ரமுதர்தாணிணைந் தடியர்தம்மொடு... *
விரவிநீறணிந் தருணைசேர்வரேல் வெற்றராயினு முத்தராவரே ... ... (௭)

(பதினொசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்)

முக்கணிநிருமுறைமுறையன்பொடு - மப்பர்கவுணியர்சொல்சுந்தரர், முப்
பொழுதுமெகிழ்புகழ்ந்திடு - முதுநூலார் - அத்தரருணைபிநெடுந்திரை-
த்துதிருநதியில்மென்பெடை - யச்சமறவுடனிணைந்துறை- மடநாராய்-
ஒத்தமனதொடுபுணர்ந்தவர் - சற்றுமகல்வதிலையென்றவ- ருற்றதுணையெ
னவிருந்தவ - ருளம்வேறாய் - எத்தனைகபடநினைந்தவர் - கைப்பொருள்க
ருதிநடந்தன ரொப்படியிறைவனை நம்புவ - தினநாமே............(௮)

(அறுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்)

இனமகளிமருகர்மடமிசையிலுங்கண்ணமதுரையிறைவனுடல்புகமொழிவ
ணகமுகபடகவளகரடதடவிகடமதகரியின்மதமறநினைவரோ... ... ... [ரோ
வனமருவுமருமுதலையொருமதலைதரவினியமதுரகவிமொழிமுதல்வரோ *
அனகமினையரதுலசயலொமதருணைகிரியடிகடமதடியவர்களே... ...(௯)

(தலைவன்விறவுகல் எழுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்)

அடியவர்சிந்தையிலினிதுறைசங்கரரருணைவளம்பதியன்னும்ர .. .. *
படியிலெநெடுங்கரியனையமதங்கொடுபதறிநடத்திடுமின்னும்ர .... *
ஓடியுமருங்கெனவுணர்விவிர்தின்றினி யொருவசனஞ்சொலவொண்ணாதோ
கடியசரங்கவினிலைருநடன்பலகலகவிதம்பயில்கண்ணாரோ.............. (௰)

(அம்மானை மடக்குத்தாழிசை)

நாராயணனனறியாநாதரருணைசருக்கு ... ... *
வாரார்சிலைகலைமெய்மாதங்கமம்மானை ... ... *

வாரார்சிலைகலைமெய்மாதுங்கமாமாயின் ... ... *
ஆராயுங்காலெடுப்பதையமன்றோவம்மானை ... ... *
அன்னமறியாதெடுப்பதையமோவம்மானை ... ... (௰௧)

(பாங்கிதலைவிக்குரைத்தல்-அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

மானென்பார்கலையென்பார்கைம்மலையென்பார்வழியேதென்பார் ... *
ஏனென்பாரிலையென்பார்யானேர்துமாந்தழைநன்றென்பார் ... *
ஊனென்பார்நிறையுந்தாராருறையுந்தென்னருணைமானே ..... *
கானென்பார்குழலைவேந்தர்கருத்தென்னேகருதுங்காலே ... (௰௨)

(புயவகுப்பு—ஆசிரியவண்ணவிருத்தம்)

கருணைமுகமண்டலத்தொளிர்மகரகுண்டலக் ... *
கலன்மலிகவின்குழைக்-குறவாயிசைந்தன ..... *
களபமகில்குங்குமத்தளறுகுடிகொண்டுதட் ... *
டயபுழசணைந்துமெய்ப்-பணிநீர்துளைத்தன .... *
கலைமதிமழுங்கிநத்திணமிருளடைந்துமுத் ..... *
தொளிசருகவெண்சுதைத்-திருநீறணிந்தன ... *

இது முதலடி.

கவிகையிரிந்துகட்பரிதியைமுனிந்துதக் ..... *
கனமுடிதடிந்துமைத்-தலையழுங்கின ... ... *
இரணியனுரங்கிழித்தளவறுமதங்கொழித் ... *
தெழுநரமடங்கலைத்-தடமார்பிடந்தன ... ... *
இமயமடமங்கைபொற்புளகவிருகொங்கையிற் ... *
சுவடுபடவின்பமுற்றதிலேகுழைந்தன ... *
இரவிகிரணங்கொழித்திசையுடன்கிளைத் ... *
தெழுபவளவன்பொருப்-பெனவேவளர்ந்தன ... *

இது இரண்டாமடி.

இகழியரவிந்தமுற்பலமகிழ்செருந்திகட் ..... *
குரவலரிகண்டகத்-தொடையாணிறைந்தன ... *
திரியலர்புரங்கெடச்சுரர்நரர்பயங்கெடத் ... *
தமனியநெடுஞ்சிலைத்-சிலைநாணெறிந்தன ... *
தினவலதநஞ்செயற்கமர்பொருசரந்தரச் ..... *
சரதமெனவந்துமற்-பொருபோர்புரிந்தன ... *
சலசமலர்மண்டபச்சதுமுகவயன்றிருத் ..... *
தலையுடனிலங்குமுற்-றலைவேறுவந்தன ... *
கடவிகடகும்பமத்தகதவளதந்தநற் ..... *
றழுகன்மதகுஞ்சரத்-துரிபோர்வைகொண்டன ... *

இது மூன்றாமடி.

அருணகிரணங்களிற்பலமணிநெருங்கிநச் ..... *
சரவமிளிர்கங்கணப்-பணியான்மலிர்கன ..... *
அனவரதமம்பலத்தினிடைமிடைந்தொழிற் ..... *
கபினயவிதங்கள்பெற்றழகோடிருந்தன ... * இது
அருமறைதெரிந்தசொற்புகலியிறைசெந்தமிழ்க் ... * நான்கா
கரசினொடுசுந்தரப்-பெருமாள்புகழ்ந்தன ... * மடி.
அரிபிரமர்தங்களுக்கரியபதபங்கயத் ... *
தருணைபதிருங்கழற்-பெருமான்புயங்களே (௰௩)

(தலைவனைவேண்டல்-மடக்கு எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

புயந்தழுவுங்கண்ணியுஞ்செவ்விதழியேயமால் ... . *
பூண்டகபத்கண்ணியுஞ்செவ்விதழியேயமால் ... . *
வியந்துசொலினன்னதும்பொன்னிறமேயெங்கள் ... *
மின்னிறமும்பொன்னிறமேபுயம்பெறுமல் .... *
அயர்ந்திவள்வாடத்தகுமோவருட்கண்பாரீர் ... ... *
அருணகிரிப்பெரியீரேயமலமோநல் ... ... *
வயந்தவிழாவழகோநினைக்கமுத்தி .... *
வரந்தருவாமோமலைமேன்மருந்தனாரே ... ... (௰௪)

(இரங்கல்-எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

மலைமேன்மருந்தராருணேசரன்றுவலைவீசிநின்றவலையே ..... *
அலைமேனிறந்துவருமீனருந்தியருகேயிடங்கொள்குருகே ... *
மலைமேன்முயங்குதலைநாளிலன்பர்மொழிசூண்மறந்தபிழையோ... .. *
தலைமேல்வரைந்தபடியோவிருந்துதமியேன்வருந்துதகவே ..... (௰௫)

(தலைவியைப்புகழ்தல்-எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

தகனமுறுவலின்மதனைமுனிபவர்சடையிலணிபலதலையினார் ... *
அகனலடியரோடுறையுமிறையவருணைவளநகரரிவையார் ... *
நிகரிறனதடவமுதநிறைகுடநிலவுமுகபடம்விலகினாற் .... *
ககனவமரருநரருமிகல்கொடுகலகமிடுவரிவ்வுலகினாற் ... (௰௬)

(இதுவுமது-மடக்கு-எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்)

உலககண்டகனாய்வருசலந்தரனுருடறடிந்திடுவார்கடல்விடங்கொளுவார், குலவுசங்கராருணையங்கிரிசூழ்குளிர்புனந்தனிலேகிளிகடிந்திடுவார்... * மலர்முகஞ்சசிமேயவடிவமுஞ்சசியே மகரமென்குழைமேய வருணமென்குழைமேய, முலையுமந்தரமேயிடையுமந்தரமே மொழியுமாசுகமேவிழியுமாசுகமே .... (௰௭)

(தலைவியைக்கொண்டுகூறல் - எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

சுகமேசுகமேயிரும்வர்த்துபுனைஞ்சூழ்கின்றவுமைத்திலைமித்திணையுட் ... *
புகமேயவிடாதுகடிந்திடுமெமைப்பால்லாமையுமின்றுபெறுத்திடுமின் *
மகமேருநெடுஞ்சிலையாளரருணைமலையாரருணைபுரிமால்வரைமேல் ... *
அகமேமெலிசலுமாறுதுணிந்துதன்விட்டகறுண்பருமன்பர்வரிற்சொலுமே.

(இரங்கல் - அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

சொல்லாரணத்திற்கறிவரியார்சோணாசலத்திற்சுகங்கடமைக் ... ... *
கல்லாலெறிந்தபகைக்குவழிகாட்டாதொழிதல்கண்டாயே .. .. *
கொல்லாவம்புஞ்சமர்க்கலத்திற்குனியாவில்லுங்கொண்டுநிற்கும் ... *
புல்லாடவனேயெமக்குறுதிபுகன்றொங்கேயகன்றானோ ... ... (௧௯)

(பிரிவுவிலக்கல் - அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

ஆரும்விரும்பியகல்விமேலாசையுமக்குளதாயிடிற் .. .. *
பாருறவென்பொருபாவையாப்பாடியபாவலர்போலவே ... *
நீருமருந்தமிழ்செப்பிடீர்மையறிந்திவணேகுவீர் ... ... *
மேருநெடுஞ்சிலையத்தனார்வீறருணைபுரிவெற்பரே ... .. (௨௰)

(காலம்மடக்கு - எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

வெற்றிமதன்போர்க்காயவம்பிறைக்குங்காலம் - வெங்கனல்போற்காயவம்
பிறைக்குங்காலஞ், சற்றுமிநகரமென்னேசங்கணியாக்காலம் - தலைவர்துறைம
றந்தென்னேசங்கணியாக்காலம், கற்றைநெடுஞ்சடைமுடியாரடியார்மேன்
முழுதுங் - கருணைநாட்டம்புரியுமருணைநாட்டுறையும், பெற்றவிளந்தென்ற
ன்மறுகிடத்தியங்குங்காலம் - பேதையென்சிந்தைமறுகிடத்தியங்குங்காலம்,

(அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

காலிற்றுலங்குநகத்தாலுங்கையிற்பொலிகூர்நகத்தாலும் ... .. *
சீலத்தரக்கனுரங்கொண்டீர்திசைமாமுகனைச்சிரங்கொண்டீர் ... *
மேலைப்புரத்தைநகைத்தெரித்தீர்வில்லேவள்புரத்தைப்பகைத்தெரித்தீர் *
சூலப்படையேமழுப்படையேயசுமந்தீரருணையமர்ந்தீரே ... (௨௨)

(மாலையிரத்தல் - மடக்கு - அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

அமர்ந்தருணைப்பதிவாழ்வீரோ, அன்பர்களன்பினில்வாழ்வீரோ ... .. *
சுமந்தொளிசூலமெடுப்பீரோ, தோளணிமாலைகொடுப்பீரோ ... ... *
இமர்ந்தருவெண்மதிகாயாதே, யிருகணெடும்புனல்பாயாதே .. ... *
கமழ்ந்தகுழற்கொடிவாடாதே, கங்குலுமிப்படிநீடாதே ... (௨௩)

(ஒன்பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

நீடாருஞாலம்வானொருநீகானுலவும்பாலையுநீருபகாலமாய்விடுநாள்... *
கோடாழிமால்பிதாமகனூரூனகோடிவீழ்நிலைக டூராபாரமீதுறவே.. *
சூடாதமலர்சூடுவர்தோள்பூதாளைவீசுவர்சேணாசலேசர்சோபனமா *
ஆடாதவாடலாடுவர்பாடாதபாடல்பாடுவராராதவேலைகூறுவரோ.:. (௨௪)

(புன்னாகங்கண்டிரங்கல்-கலித்துறை,)

கூத்தாடுமருணேசர்வரையன்பர்பொருளன்புகொண்டுன்னையும் ....*
நீத்தார்கெனிழலாருமிலையாகிநின்றாய்நெடுங்காலமே ... ... *
பார்த்தாலுமபலேகிளைத்தாய்சலித்தாய்பசுந்தென்றலாய் ... *
பூத்தாய்பொன்னிறமாகவென்னாகமேயன்னபுன்னாகமே ... (௨௫)

(இரங்கல்-மடக்கு-அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

நாகமெடுத்தவரம்பனார்,நாலுமறைக்குவரம்பனார் .... *
தோகையிடத்தவர்சேணராய்,சோணகிரிப்பதிவாணராய் ... *
மாகமடுத்தவிளங்காவே,மன்னவனெண்ணம்விளங்காவே ... ... *
கோகனகத்திருந்தேனே,கொண்கனைவிட்டிருந்தேனே ....(௨௬)

(ஊசல் மடக்கு எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

இருசரணச்சிலம்பாடவாடூருசல்,இளமுலைப்பொற்சிலம்பாடவாடூருசல்-
மருவுகலைமருங்கசையவாடூருசல்,வரிவளைக்கைமருங்கசையவாடூருசல *
அருமறைகளளவிடுதற்கரிதாமையா,ரருணகிரிப்பரமர்புகழடைவேபாடிப்-
பொருவிருகட்கயலுலவவாடூருசல்,புயமதனன்கயலுலவவாடூருசல் (௨௭)

(பாங்கிசொல்லுதல் எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்) .

ஊசலசைத்திடுவார்குன்றெதிர்கூவிடுவாரொண்டரளங்கொளுவார்தண்டலை
கொய்திடுவார்,ஆசிப்புனற்றுளைவாரம்மனைபந்துகழங்காடிமகிழ்ந்திடுவா
ர்கோடிமடந்தையரோ,—ஈசர்விடைக்கொடியார்பூசைசெயற்கெளியார
ருணைப்பதிசூழ்மேருவினிற்கவணே,—வீசுதினைப்புனமேயாவமானத்தெ
ளிமேயம்வேலர்மனத்திடையேமாலைவிளைத்தவரோ ... ... (௨௮)

(மடக்கு—கலிவிருத்தம்,)

மாலையென்பாங்கலத்தாரும்,மறைநாலுங்கலத்தாரும் ... *
கோலமன்னகலத்தாரும்,குறைவில்பரிகலத்தாரும் ... ... *
மாலைவில்வேள்சலத்தாரும்,மதர்த்தமதசலத்தாரும் ... *
மேலகலாச்சலத்தாரும்,விளங்கருணாசலத்தாரோ ... ... (௨௯)

(அலைவினையப்புகழ்தல்-அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அருணமொளிதனினுமொளிருமலைமருந்தாயவமலரதிருங்கழலிணர் [ம்.
மருமலர்விரிந்துததிபெருகருணையம்பதியின் மருவியமடந்தையிடையா

ஒருகொடியிலொன்றுகமுமொருபவளமொன்றுகுமிழொருமதியமொன்றுபிறைதான், இருசிலையிரண்டுசேலையிருபணையிரண்டுகுழையிருமுலையிரண்டுமலையே ... ... (௫௧)

(எழுதரிதென்றல்- எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

மலைபாகனத்தர்மலைமயிலாசனத்தமொழுமலையாநிலத்துவருவார் ... *
அலைபாசனத்தமொடுமமிர்தாசனத்தர்தொழுமருணாசலத்தர்வரையீர் .. *
முலையானைகட்டியிடைவெளிதேர்நிறுத்துமதிமுகமாயமைத்தருகுலாம் *
இலைவேல்பரப்பியினிதெழுதாளமைப்பனினியெழுதனிருப்புமனமே

(இரங்கல் சிலேடை-கட்டளைக்கலித்துறை,)

மேலாடைதோற்றணிசங்கழிகைவிட்டுமென்சிலம்பின் ... ... *
காலால்வருந்திநிலங்கீறுங்கோலத்தைக்கண்டிருந்தும் ... ... *
ஆலாலமுண்டவரண்ணாமலையர்தமன்பர்க்கன்றீ ... ... *
மாலானவர்க்கிரங்காரிங்ஙனேயொருவன்கண்ணனே ... ... (௫௨)

(நேரிசைவெண்பா,)

கண்ணருக்கும்போதருக்குங்காண்டரிதாய்க்கண்பறித்த ... *
திண்ணருக்குநன்றாய்த்தெரிந்ததே-விண்ணருக்குப் ... ... *
போற்றுவாரண்ணார்புரமெரித்தாரென்பிறவி ... ... *
மாற்றுவாரண்ணாமலை ... ... (௫௩)

(இரங்கல்-கலிவிருத்தம்,)

அண்ணாமலையத் தாடற் கிரிமேல் ... ... *
எண்ணாமலையத் தவமெய் திலரால் ... ... *
கண்ணாமலையத் தனைநீர் கலுழும் ... ... *
விண்ணாமலையத் தரும்வெண் மதியே ... (௫௪)

(பாங்கன்-துணிவு - எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

மதுவானிறைந்தகுழன்மடவார்தெருங்கருணைமலைமேன்மருந்தர்வரையில்,
முதுநீரில்வந்தவவரடையாளமென்றிறைவர்முதலேமொழிந்தபடியே *
இதுநாகமன்றுமுலையிதுபூகமன்றுகளமிதுமேகமன்றளகமே ... . *
அதுநீலமன்றுவிழியதுசாபமன்றுநுதலதுகோபமன்றதரமே ......(௫௫)

(நாணவிடுதூது - எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

அருணைவெற்பினரயனிருக்கவுமரியிழைக்கவுமாகவே ... . *
திருமிடற்றொருகருமைவைத்தவர்திருநதிக்கயறேடியே .... *
கருதுநெட்டுடலசைவறத்துயில்கபடநித்திரைநாரைகாள் ..... *
இருகணித்திரையிலையெனச்சொலவிறைவர்பக்கலிலேகுமே .... (௫௬)

(பாங்கி தலைவிக்குரைத்தல் கட்டளைக்கலித்துறை,)

ஏகார்புனத் தத்தலைமைபாற்கரிபட்டதென்பவொன்றும் .... *
போகாதவூர்க்குழைந்தேடுவார்புலிக்காற்முனியும் ... ... *
நாகாதிபருந்தொழுமருணாசலநாட்டிளந் .... *
தோகாயணங்கனையாயவர்க்கேதுசொலத்தக்கதே ... ... (௧௭)

(எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

சொர்க்கமெனுமொருபதவியிருக்கமாலைத் .... *
துளவணியுமரிபதவியிருக்கமேலை .... *
நற்கைலைமலையிருக்கநினைத்தோர்க்கெல்லா .... *
நயந்தமுத்தி நகரமொன்றேநல்காநிற்பீர் ... ... *
பொற்கையினுமுமைவணங்கிப்பரிந்துபூசை .... *
புரிந்துதவம்புரிந்துதினம்புகழ்வார்க்கெல்லாம் ..... *
எற்குலவுபுகழருணையீசனரே ... . *
யினிதளிக்கும்பதவிதனக்கென்செய்வீரே .... (௧௮)

(சித்து - எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

வீரத்தையணிமழுவாருமைபங்காளர் ... . *
விளங்கருணைச்சித்தர்யாம் விளம்பக்கேளா ... ... *
காரத்தையெமக்கிடுஞ்சத்தையேகா... .... *
கனகமெனக் காட்டிடுவோம்கரியோருக்குத் ... ... *
தாரத்தைப்பொன்னாக வமைத்தோந்தம்பி ... ... *
தாம்பரமும்பொன்னாகச்சமைத்தோமிந்தப் .... *
பாரத்தையாரறிவா ரயனாகத்தைப்... ... ... *
பசும்பொனிறமாகவுமே பாவித்தோமே ... ... (௧௯)

(இதுவுமது - எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

பாதமெமக் களித்தவரு ணேசனார்க்கின் ... ... *
பச்சிலைபொன் செய்திமையோர் பசிநோய்தீர ... *
ஓதுகடைமருந்தளித்த சித்தரேம்யா ... ... *
மொருபிடிசா றல்லதுகூழுண்டோவப்பா ..... *
மாதவர்தந் திருவாணை கரிகளெலா .... *
மாதங்க மாக்குகிற்பே மருந்தில்லாதே .... *
ஓதமறநாகமொளித் தராவாச்செய்வோ .... *
மிரும்பையும்பொன்னாகவுரைத் திசைவிப்பாமே ... (௨௰)

(தலைவியைப்புகழ்தல்-எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்)

இதழியந்தொடையாருணையங்கிரியி லிரதமூர்ந்திவிடுவலவனே ... *
பதியடைந்தமறுகினில்வசந்தனதி படைபொழிந்ததுபகருவேன் ... *
புதியகொப்புசிலைஐயிரண்டருகு பொழியும்வெம்பகழிப்பாரரு *
உதயதந்தமதகளிறுடன்கதலியுபயதண்டுவருகின்றதே ..... (௬௧)

(ஒன்பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

வரைக்கனகசாபசோணகிரிப்புனிதகாலகால ... ... *
மதிக்குநெடுமாயர்போலவே ... ... *
துரைக்குளினியாரியாவரவர்க்குமுனிலாமணீமெ ... ... *
தழற்சிகரியாசனிதியோ... ... ... *
விரைக்கமலவோடையாவர் புரத்தைமுனிபாணமாவர் ... *
விரித்தகொடியாவரீசலால் ... ... *
இரக்குமனைதோறுமேறி நடத்துமெருதாவர்மேவி ... *
யிடத்திலுறை தேவியாவரோ .... (௬௨)

(கட்டளைக்கலித்துறை,)

ஆனிடபக்கொடிசோணாசலனென்றுமன்பர்மலர் ... ... *
தானிடமுத்திதரும்பெருமானென்றுஞ்சப்புவென்றும் ... *
கானிடம்வேடன்முன்னூணிடவுண்டதுகண்டுமொரு .... *
மானிடமானவனைத்தேவர்செய்வதென்வந்தனையே ... (௬௩)

(கலி எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

தனையிருக்குமறைதுதிக்குமருணைநாதன் ... ... *
சரணமலர் புகழ்களியேஞ்சகரபூசை .... *
வினையிருக்குமவர்க்கெளிதா வரிதானையோ .... *
விதிவசத்தால் விவரமற்ற விதஞ்சொல்வேனே ... . *
புனையிருக்கநெடியகஞ்சா விருக்கவீணை ... *
பச்சையாலிலைதுயின்றான் பனையன்றேவீ ... *
பனையிருக்கப்பணிதுயின்றான் மதுவார்தெய்வ ... *
வாழிவிட்டுப்பாற்கடன்மீதழுந்தினானே ... (௬௪)

(இதுவுமது - நேரிசைவெண்பா,)

ஆனார்கொடியாரருணபுரிக்களியேம் .... *
வானாடரோனே மதியற்றார்-மேனாளில் ... ... *
சும்மாகஞ்சாவிலையே தூளிடித்துத்தின்றாலும் ..... *
தம்மாகஞ்சாவிலையே தான் ... ... (௬௫)

(பிச்சியார்-எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

தாமணிவர்திரிசூல மெதிர்கண்டார்மேற் .... *
சக்கரத்தைவிடுவர்சிவ சமயத்தாவர் ... ... *
காமுகரையாண்டுகொள்ளர் சிவநூல்கேட்பர் ... ... *
கருத்தினின்மா றெரிசனமே காட்டாநிற்பர் ..... *
ஆமையரவணிதொடையார் விடையார்வாழும் .... *
அருணகிரிவளநாட்டி லகங்கடோறும் ... ... *
சேமநிதியெனவுலவும் பிச்சியார்தந் ... ... *
திருப்பெயரைவெளியாக்கித் திரிகின்றாரோ ..... (௬௬)

(இதுவுமது-மடக்கு கட்டளைக்கலிப்பா,)

தில்லைமன்று ணடப்புரிபாதனார் ... ... *
தேவராயர் திருவருணைக்குளே ... ... *
முல்லைமல்லிகை சண்பகம்பிச்சியார் ... . *
மொய்த்தவார்குழன் மோகனப்பிச்சியார் ... *
நல்லமேனியும் பொற்றிருவேடமே ... . *
நாடிபிட்டதும் பொற்றிருவேடமே ... *
இல்லையாயினு மிவ்விடையையமே... ... ... *
எற்கவந்தது மிவ்விடையையமே... ... (௬௭)

(கார்கண்டு-பாகனொடுசொல்லல் - கட்டளைக்கலித்துறை,)

அயங்காட்டியமறை யார்விடையாள ரருணைவெற்பில் ... *
புயங்காட்டியமணித் தேர்வலவாமுன்பு போனகொண்டல் ... *
சயங்காட்டிக்கோபமுஞ் சாபமுங்காட்டித் தடித்திடித்துப் ... *
பயங்காட்டிநாலஞ்சு மேதனியேநின்ற பைங்கொடியே ... (௬௮)

(நேரிசைவெண்பா,)

பைங்கட்புலிக்குப் பரிபவத்தைக்காட்டிநா ... *
சிங்கத்தினையடர்த்துச் சீறியே-வெங்கைப் ... *
புழைக்குஞ்சரமுரித்துப் போர்த்ததருணைக்கே... ... *
குழைக்குஞ்சரமொன்று தான்... ... (௬௯)

(குறம்-பதினாற்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

ஒன்றுமூன்றுநாமுளைக்க வந்துகேளுமரிவைமீர் ... ... *
உதயமானகுளகுநெல்லு மொற்றைபட்டதாதலால் ..... *
குன்றுமானுமழுவுமாக வொருவர்வந்துதோன்றினார் ..... *
கண்டமட்டிலேகழும்பர் கைக்கபாலரவணாயும் ... *

சென்றநாடிலருணைமீது காணலாகுநாமமும்
தேவராயராலாது தெய்வமேறுகண்டிலேம்
நின்றுவாடுமிவடனைசை யிடர்தவிர்ப்பராதலால்
நீறுகொண்டுமூன்றுரேகை நெற்றிமீதிலெழுதுமே (ருய)

(இரங்கல்-இதுவுமது,)

நெற்றிமீதுகண்படைத்தவும்மைமாரனெய்வனோ
நீறணிந்தவரவிருக்க நெடியதென்றல்முடுகுமோ
வெற்றிபானுதாவிருக்க மதியமும்மைநலியுமோ
விரவுகங்குலுமதுகண்கள் வெயிலின்முன்புநிற்குமோ
கற்றையஞ்சுழலியெந்தவுசவிகொண்டுபகைவெலும்
கருணைகூர்தெனருணைமேவு கலியுகத்துமெய்யரோ
செற்றலர்கள்புரமெரித்த புழுகணிப்ரதாபரோ
தேவராயச் சுகந்த இளவசந்தராயரோ (ருக)

(கார்காலம்-அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

நினைப்போதுகானே நினைத்தாலுமேலோர்சிறப்பானபேறீகுவோர்
வனத்தாடுஞ்சஞ்சலத்தாடுதீராமயிற்பேடைகாளோடைகள்
வினைப்பாவியாமென விழிப்பாயுநீராண் டிருத்தேறுகார்காலமே
தனித்தாவிசோர்வார் தமக்காலமேநீள் சரற்காலமேகாலமே (ருஉ)

(இளவேனில்- நேரிசையகவற்பா,)

காலையுமாலையுங் கைம்மலர்குவித்து
மாலுமயனும் வணங்குதற்கரியோன்
இமைக்குமுனுலகமியாவையும்படைத்தோன்
தனக்கொருதாயுந் தந்தையுமில்லோன்
பழவினைக்கயிற்றிற் பல்லுயிர்ப்பாவை
அழகுறநடிக்கத் திருநடம்புரிவோன்
வினைவலையறுக்க மெய்த்தவவேடன்
மனவலைப்பிணிக்கு மான்மதனுதன்
பெருமறுபத் தாறுயிரம்பொன்
மாறுத்தியாக வசந்தவிநோதன்
அண்ணமலையன திருங்கழலன்
கண்ணாரமுதன் கைலைப்பொருப்பின்
மறவிதநுவசையின் மலையாசலமென
இருத்தியகுருத்திகொண் டிளங்கால்பரப்பி

காவுலப்பல்லவக் கனனுவகைப்பக் - *
குறைவறுகுயில்வாய்க் குறட்டினிலடக்கிப் - *
பொறிதிகழரிக்கரி யதனிடைச்சொரிந்துள் *
இசைத்திடுமஞ்சரிப் பசைக்கே லசைத்து - *
மதவீரனுக்கு வசந்தக்கருமான் - *
பணிமலர்ச்சாயகம் பண்ணிநீட்டினன் - *
இன்னமும் வந்திலர்கேள்வர் - *
புன்னையங்கருங்குழ லன்னமென்னடையே (௫௩)

(மடக்கு-எண்சீர்க்கழி நெடி லாசிரியவிருத்தம்.)

அன்னியமாசடையாரும் பின்னியமாசடையாரும் *
அடிமாறநடித்தாரும் முடிமாறநடித்தாரும் *
உன்னுமறமொழிந்தாரும் பின்னுமறமொழிந்தாரும் *
உகைத்திடுமானேற்றாரும் மிகைத்திடுமானேற்றாரும் *
என்னகத்தாமுரியாரும் கைன்னகத்தாமுரியாரும் *
எருக்கிதழிமணத்தாரும் முருக்கிதழிமணத்தாரும் *
வன்னிவடிவனத்தாரும் சென்னிவடிவனத்தாரும் *
வருகருணைப்பதியாரும் பெருகருணைப்பதியாரே (௫௪)

(சம்பிரதம்-எண்சீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.)

பரவைபொருக்கெழவுங் ககனம்வடுப்படவும் *
பரிதிவடக்கெழவு திருதிகுணக்குறவும் *
இரவுபகற்படவும் பகலிரவொத்திடவும் - *
எளிதினியற்றிடுவோ மிகைசிலவித்தைகளோ *
அரவமணிப்பணியா னனலகிரிப்பெருமான் - *
அருணகிரிக்கிணையா வவனிதலத்திடையே - *
கருதிமனத்தினிலே சிறிதுதினைத்தளவே - *
கதியையளித்திடுமே ரபதியுமுணர்த்துவமே (௫௫)

(கருணைச்சிறப்பு-நேரிசைவெண்பா.)

உள்ளத்தின் ஞான முயர்ந்தவிடத்தன் றியிருட் *
பள்ளத்தி லென்றும் படராதே-வள்ளல் *
அருணாசலப்பெருமா னம்பிகையோர்பாகன் *
கருணாசலமாங் கடல்- (௫௬)

(பாண்-அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

கங்கைவார்சடைப்பரமர்தென் னருணையிற்கடைதொறுநீபாட *
அங்கையாவிருசெவிபுதைத்தேத்துவோமருச்சுனன்றிருநாமம் *

எங்கைமார்செவிபொறுக்குதின்னிசையெனுமிடிக்குரன்மகிழ்வாரார் ... *
மங்கைமார்செயலறிந்துகொள்பாணனேயிலனைப்புகழ்வாமே ... (௫௭)

(தலைவியைப்புகழ்தல்-அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

புடைசெறிந்தளிபாடுமிகழிபற்கொண்டைமார்பர்புலிபதன்சலிநாடுவார் *
மடையிளங்கயருவு மருணைபங்கிரிமீதுமலரணங்கெனமேவுவார் ...... *
நடையுமிந்திரவேழமிருகையிந்திரதாருநயனமிந்திரநீலமே....... *
இடையுமிந்திரசாலநுதலுமிந்திரசாபமிதழுமிந்திரகோபமே .. (௫௮)

(உருவெளி கலிவிருத்தம்,)

இந்திரகோபமாமிதழிபாகனார் - - *
செந்தமிழருணைநந்தேருஞ்செல்லுமே - *
சந்திரரேகையுஞ் சமரவாளியும் - - *
மந்தரமேருவும் வளர்ந்துகொண்டவே - (௫௯)

(தலைவியைவியத்தல் - எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,

கொன்றலணிகண்டர்திரை கங்கையணிசெஞ்சடையர் - - *
கொம்பனொருபங்கிலுறைவார் - - - *
அண்டபகிரண்டமெள வங்கியெனநின்றவதி - - - *
ருங்கழலர் தங்கருணையீர் - - - - - *
கண்டுளதுகொண்டன்மிசை திங்களெழுகின்றதிது - - *
கண்டதிலை யுங்கண்முகமா - - - - *
மண்டலமெனும்புதிய திங்கண்மிசைகொந்தளக - - *
மஞ்சுகுடி கொண்டவண்டவே - - (௬௰)

(நேரிசைவெண்பா)

அடுத்தமதிச்சென்னியின்மேலப்பிருக்குமற்றோர் - *
இடத்திலேநாரியிருக்கும்-தடக்கையில்லை - *
எந்துசிலைவிட்டிருக்கு மெம்மருணைநாதனார் - *
போந்துபுரமெரித்தபோது - - (௬௧)

(கார்காலம்-கலித்துறை)

போதக்குமரிதான வருணாசலத்தீசர் பொன்மேருவாய் - *
ஏதப்படும்பாவி மனமேயிராந்தாரி தெண்ணூர்கொல்லர் - *
ஓதத்திநீரோடு கனவுண்டுபுயன்மீள வுமிழ்தன்மைபோல் - *
காதற்குன்மடவார்மெய் பொன்பூசுமின்வீசுகார்காலமே - (௬௨)

(தலைவியைவேண்டல் கொச்சகக்கலிப்பா,)

காரவந்தாலன்னகறைக்கண்டனார்செங்கதிரோன் - *
தேர்வந்ததும்பொழில்சூழ் தென்னருணைநன்னாட்டில் - *
ஆர்வந்தானுந்தணியா தவ்வமன்னீராணும் - *
நீர்வந்தாலாசை நெருப்பவியுங்காணுமே - (௬௩)

(பனிக்காலம் கலித்துறை,)

காணம்பாரந்தோலி னுடையாளரருணேசர் கைலாசமேல் - *
தூணங்கணிகர்தோள னுறைகின்றநகளருடு சொரியாதமோ - *
பூணங்கைவளைசிந்த மடவார்மனத்தேறு புகைபோலவேள் - *
பாணங்களுதிர்கின்ற துகள்போலவுறைகால் பனிக்காலமே (௬௪)

(நேரிசைவெண்பா)

பண்ணிறந்தவாசவரிற்பலகோடிமாண்டாலும் : *
எண்ணிறந்தவேதரிறந்தாலும்-கண்ணுற் - - *
கமைத்தவெலாமாண்டாலு மண்ணாமலையார்க் - *
கிமைப்பளவுங்காலமில்லை - - - (௬௫)

(தலைவனைவேண்டல் - ஒன்பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்)

இலகொளிபரந்தமாரன்விடுகணைதுரந்துதாம - *
மிடுமிருநெடுங்கண் மாதரார் - - *
விலகரியகொங்கைமீது பழநழுவிவந்துபாலின் - *
விழுவதெனவந்து சேர்கிலீர் - - *
மலகரிகுறிஞ்சிமீதசி வைரவிசுரும்புபாடும் - - *
வயலருணைமங்கை பாகரே - - - *
பலமலர்கதம்பதூளி மிர்கமதசுகந்தம்வீசும் - - *
பரிமளவசந்த ராசரே - - - (௬௬)

(மதங்கு - ஒன்பதின்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்)

வசிரம்வயங்குநீறு மபிநயபுசங்கராசு - - *
வலம்புமணிந்த தோளினார் - - *
அசலகுலமங்கைபாகர் பரிமளவசந்தராச - *
ரருணையின்வளங்கள் பாடியே - - *
இசைபெறவரங்கினூடு டவுரிகொண்மதங்கியார்த - *
டிலகிவளர்கொங்கை யானையே - - *
திசைபெறவிருந்தயானை பிறகிடமுனிந்துபோர்செய் *
திறலியமனந்த மானவே - - -(௬௭)

(இதுவுமது - மடக்கு - கட்டளைக்கலிப்பா,)

நதியைச்சூட திருங்கழனாகனார், நம்பனாரருணபுரிவீதிமேல் - *
சதியிற்பாடி நடிக்குமதங்கியார், தந்தவாசைதரிக்குமதங்கியார் - *
வதனத்தாற்சசி மண்டலமாறுமே, வந்திருந்தவிம்மண்டலமாறுமே *
கதியிற்கொண்டது மந்தக்கரணமே, கண்டபேர்க்கிலையந்தக்கரணமே ()

(குறம் - எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

அருணமணிமூலக்கிரிமேற் செங்கைவைத்தா - *
யாதலாலருணகிரி யன்பன்மூதூர் - - *
லருணமூலைகண்ணாரப் பார்த்தாயுன்றன் - - *
மகிழ்நனுங்கண்ணாரமுதன்வந்துகேளாய் - *
தரணியிலுன்றனைச்சேர்வன் முருகன்போலத் - *
தனையனையும்பெறுவையிவை தப்புமயின் - *
திருநிறைவண்டார்குழலாய் குறமும்பாடேன் - *
சிறந்தகுறக்கூடையும்பான் றீண்டிலேனே (௬௯)

(மறம் - இதுவுமது,)

தீண்டரியமடற்பனையின் சுருளைவாரி - - *
சிற்றிரும்பாற்சுற்றிவரச் செருக்கிகூட்டி - *
நீண்டதுவுஞ்சுருண்டதுமா வளைந்தசுற்றி - *
திருப்பமெனக்கொடுத்தெதிரோ நிற்குந்தூதா - - *
தாண்டவமாடும்பரனருணைநாட்டிற் - - *
றருமறப்பெண்டனைவேண்டிச் சமரிற்போந்து *
மாண்டவரோறியகோணல் வளைகளுங்கள் - *
வருங்கல்வழிவாயினடு மரங்கடாமே - (௭௰)

(மடக்கு - கலிவிருத்தம்,)

மறைக்கவனப் பரியாரும், வளைக்கவனப்பரியாரும் - - *
எறித்தவிரும் பிறையாரும், எவரும்விரும்பிறையாரும் - *
பொறுத்தசின விடையாரும், பொருந்துசின விடையாரும் - - *
அறத்தவளம் பதியாரும், அருணை வளம்பதியாரே - - (௭௧)

(கலித்துறை,)

ஆரணிதுங்க னாரணிபங்க னருணேசன் - *
காரணியஞ்சுங் காரணநஞ்சந் தரியானேல் - *

வாரண மெங்கே சாரண மெங்கே மலர்மேவும் - *
பூரண மெங்கே நாரண மெங்கே போவாரே (௭௨)

(தழை-கட்டளைக்கலிப்பா,)

போந்தபோதக நல்லுரியாடையார் - - *
போர்விடையாளர் புகழருணைக்குளே - - *
ஈந்ததோர் நறுந்தழையையமே - - - *
எங்கண்மாத ரெடுத்துமகிழ்ச்சியாய் - - *
மோந்தபோது துவண்டது மெய்யிலே - - *
மொய்த்தபோது புலர்ந்தது கண்ணிநீர்ப் - *
பாய்ந்தபோது நனைந்தது மீளவும் - - *
பார்த்தபோது பசந்து மலர்ந்ததே - - (௭௩)

(இரங்கல் - மடக்கு-எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்த,)

மலரிதழித்தொடையான், மதியணிவித்தகனார் - *
மலைமகளர்ப்புகனார், வயலருணைப்பதிசூழ் - - *
குலவுமிடக்கழியே, பலவுமிடக்கழியே - - - *
குருகையினைக்கயலே, யுறவுமெனக்கயலே - - *
சலமிகுமுற்பலமே, தளர்வது முற்பலமே - - *
சருவுமனத்திடரோ, கழுவுமனத்திடரோ - - *
இலைநெரிசற்பனையே, யிவருமை சற்பனையே - - - *
யினியபணித்திலமே, யினியிலை நித்திலமே - (௭௪)

(சுவடுகண்டிரங்கல்-எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

நித்தனம்பனருணாசலத்திருவை நின்றுதேடியுழ னெஞ்சமே *
இத்தடஞ்சுர மடங்கவோ விதல் தில்லைவேறுமர மிதனிடை - *
அத்திநின்றவிட மவ்விடஞ்சிலைகொளாசு நின்றவிட மவ்விடம் *
மைந்துளஞ்சியிளவஞ்சிநின்றவிடமிவ்விடஞ்சுவடுமேவுமே (௭௫)

(மடல்-விலக்கு-கலிவிருத்தம்,)

ஏறுடையண்ணலாரேழையாகனார் - - *
ஆறணிசென்னியாரருணைபெற்பரோ - *
கூறொருபெண்ணையே கூடவேண்டுவார் - - *
வேறொருபெண்ணையே வேட்டுவார்கொலோ (௭௬)

(தவம்-எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

சாய்ந்தநலமருந்தருந்தி யரியமேயாக
வசைபுரிந்துவாயுவுள்ளே யடங்கினாலும்
காய்ந்தவிருட்பூசியிலே தவஞ்செய்தாலும்
காயம்வருந்திடுவதல்லாற் கதிவேறுண்டோ
ஆய்ந்ததிருநீறணிந்தைந் தெழுத்தையோதி
யகமகிழ்ந்துசிவாகமத்தி னடைவையோர்ந்தே
ஏய்ந்தருணாசலத்தைவலங் கொண்டாரன்றே
வினைக்குமுன்னேகைலைமலை யிலங்கொண்டாரே. (௭௭)

(மலையிரத்தல்- அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

இலங்கியதிங்களெழுந்தா லெங்கண்டமின்வெங்கதிரொன்பாள்
கலங்கினளயினுமன்னுள் சட்காமலங்குவியாவோ
துலங்கியவெங்கதிர்காலை சோணகிரிப்பெருமானே
அலங்கலையென்றுகொடுப்பா யன்றதுவெண்மதியாமே. (௭௮)

(நேரிசைவெண்பா,)

ஆற்றுங்காற்கஞ்சத் தவர்தாமரைக்கண்ணர்
சாற்றுங்காற்கண்ணாவர் தந்தையார் கீற்றுமதி
சூடும்பெருமானைச் சோணகிரிவித்தகனைத்
தேடுவதிங்கெப்படியோ சேர்ந்து. (௭௯)

(கட்டளைக்கலித்துறை.)

சேணார்திருவுடைச் செல்வரைக்காணிற் சிறப்புச்செய்து
பேணாதவருமுண்டோபுவிமீதிற் பெருத்தெழுந்து
சோணாசலவடி வாய்வெளியாய்நின்ற சோதிதனைக்
காணாதகண்ணனைச் சொல்வர்செந்தாமரைக் கண்ணனென்றே. (௮௰)

(தவம் நேரிசை வெண்பா.)

என்றுமதிக்கண்ணா ரிறைவரருணாபுரியில்
நின்றுதவம்புரியாய் நெஞ்சமே-பொன்றிரளான்
மாதலையாலுயிழைசூழ் மாதலையானீ துவண்டு
மாதலையா னுமையென் சொல்வாய். (௮௧)

(இடைச்சியார்-எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,)

சொல்லாடினுமக்கிரண்டு பசுவேயுண்டு
சுமத்திடுபாற்கலசமுமத் துணையாமீதும்

அல்லாமலிடையின்மிக விளக்குபோனீ .... *
நயினார் தமிடை மதியே வசுந்தைகாணே .... *
புல்லாரொன்பணிகொண்டையா ணருணை நாட்டிற் .... *
பொதுவர்குலமங்கையமே புவிமேற்கண்டோம் .... *
கல்லாநந்தனிக்கனியே யெடுத்தக்காலு .... *
மிரண்டுமுலையாமலகன் தேகுவீரோ .... (௮௨)

(இதுவுமது-கட்டளைக்கலித்துறை.)

வீரனைநல்கி மகழுறுசெய்த விடைக்கொடியார் .... *
காரணிகண்ட ணருணாசலத்திற் கலசங்கொண்டு .... *
மோரதுகூறு மிடையினமானுக்கு முண்டகம்போல் .... *
நாடிமெல் வினம் வல் வினமாகு மிருதனமே .... (௮௩)

(தலைவி யிளமையுணர்த்தல் - அறுசீர்க்கழி நெடி லாசிரியவிருத்தம்.)

தடனுகமணிவெயிலும்பிறையுமிழுநிலவுமெதிர்சடிலநாதன் .... *
அடனுகநெடுஞ்சிலையா சுரர்புரமெரித்தபிரா னருணைநாட்டில் .... *
திடனுகமலையவமே தனஞ்சிறிதுங்காணுத சிறியார்சம்மைக் .... *
கடனுகநீர்வினவிப் பிணைத்தடிமுறிதலைவயன் கைக்கொண்டீரோ... (௮௪)

(அறுசீர்க்கழி நெடி லாசிரியவிருத்தம்.)

கையடைந்தமழுமானுஞ் செழுமானுமுழைமானுங்கா றுமானும் .... *
மையடைந்தவிழிமானு முடனுகவருணேசர் வருகுவாரோ .... *
மெய்யடைந்தநிறங்கருகி விழிகளும்பஞ்சடைந்துவர மிடற்றினூடே *
ஐயடைந்துபடர்ந்துவரயமனடர்ந்துதொடர்ந்துவருமன்றுதானே (௮௫)

(தலைவன்சொல்லல்-நேரிசைவெண்பா.)

அண்ணாமலையா ணருணையனையீ ரும்மைக் .... *
கண்ணாலஞ்செய்தான் கமலத்தான் - எண்ணுத் .... *
திணைகங்காலஞ்செய்தமுலை யேந்திழையீரென்னை .... *
பணக்கோலஞ்செய்தான் மதன் .... (௮௬)

(கொற்றியார் - அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

மழலைமொழியிசையாலுங் கொடும்பார்வையதனாலுமயக்கமாக்கிச் .... *
சுழலும்விடாரவமெலாம் படமெடுத்துமுன்னாடத் தோன்றினீரோ .... *
அழலுருவமணிவரத்த னருணகிரிவளநாட்டிலளிவந்தாலும் .... *
குழலொருசற்றுண்டாயிலெனப்படியாவாட்டிடுவீர்கொற்றியாரோ ..(௮௭)

(இதுவுமது - கொச்சகக்கலிப்பா.)

ஆரிசழிகுமு மருணேசர் நன்னாட்டில் ... ... *
வாரிறுகும்கொங்கை மலைசுமக்குங்கொற்றீரோ ... ... *
பேரிருள்போய்நாமப் பிறைநிலவுகண்டொளிக்கக் ... ... *
கூரியகண்ணில்லார் குழல்குறைந்தாளென்பாரோ ... ... (அஅ)

வஞ்சித்துறை.

பாணூர்மொழிநிறை ... ... *
சோணசலாடி ... ... *
பேணுதவனூறு ... ... *
மாணநாகம்ம ... ... (அகூ)

வஞ்சிவிருத்தம்.

நாகவாசையில் வன்பிறர் ... ... *
தாணியீதொரு கொன்பெறூர் ... ... *
சூருமேலாகமூ மின்புறூர் ... ... *
அருணைநாயகா ரன்பறூர் ... ... (கூய)

(வேற்றொலி வெண்டுறை.)

அருணைபதிருங்கழலரா றணிசெஞ்சடையா ளரரிவைபாகர் ... *
கருணைநெடுங்கடலானபெருமானூர் தாடொழுதார் கதியைநாடின் ... *
மரணமிலாவிமையவர் தம் வானுலகமன்றே ... ... *
பொருணிறையுதான்மறையோர் புகலுமத்தாட்பூவே .... (கூக)

(இரங்கல்-கலித்துறை)

பூவுண்டவிடையாள ரருணாசலத்தீசர் பொன்மேருவாய் ... *
பாவுண்டபுகழாளர் பிரியமெனச்சொன்ன பருவத்திலே ..... *
காவுண்டுகுயிலுண்டு மயிலுண்டுகிளியுண்டு கனிதாவுகே ... *
மாவுண்டுதருவுண்டு திருகுண்டமனனுண்டு மறவாயமலே ... (கூஉ)

(வெறிவிலக்கு-கலிவிருத்தம்.)

வாங்குவில்லேர் நுதல் வயங்குமாதரீர் ... ... *
ஈங்கிவளொருவர்கை யேட்டைவாங்கினாள் ... ... *
ஆங்கடுவெணிந்தவ ரருணைநாட்டிலே ... ... *
நீங்கண்மையழிப்பது நீதியல்லவே ... ... (கூங)

(தலைவியைப்புகழ்தல்- கட்டளைக்கலித்துறை.)

அள்ளற்கடல்விடநீங்காதகண்டரருணைவெற்பிற் ... ... *
பிள்ளைப்பிறையுஞ் சிலையுமொப்பாநுதற் பேதைநல்லாள் ... ... *
வள்ளத்துலமுபொருகண்ணுக்குத்தோற்றம்பும் வாரிதியுங் ... ... *
கள்ளக்கடலு மிராசியின்மீனுங் கடைப்பட்டதே ... ... (கூச)

(கலிச்சியார் - அறுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.)

தேவிவிடமகலாதவருணகிரிவளநாட்டிற்றெருக்கடோறு ... ... *
மாவிரதமுனிவரொலாமயல்கூரக்கயல்கூறும் கலிச்சியாரோ... ... *
காவிதிகழ்வாவியிலே மீன்பிடித்துவரும்வாளைக்கண்டோர் ...*
ஆவியெலாம்பிடித்திழுக்குமுறைமைப்போலவொருவரைக்கண்டறிந்திலோ [மே

(இதுவுமது நேரிசைவெண்பா.)

மேலாறணிசடையார்வீறருணைவீதியிலே... ... ...*
மாலாகவந்த கலிச்சியரோ கலா .. .. *
பிருவராலுங்காட்டும் யான்பிடிக்கக்காதே ... : *
லொருவராலுந் தீருமோ... ... (௯௬)

(செவிலிநற்றாயைத்தேற்றல் எண்சீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.)

ஒருவராலுமணுகாதநளினவுபிரீனுனவொருவர்கள்வனுறைசயான்... ... *
மருவினானுமெனதாகுநலமெயழிகமேடறுமினிநடிமீளவே ... ...*
கருணைநீதிமனைபேணுமாதுடன்கடல்களேழுமலைமேழுமேழுமா.....*
வருணர்சூழுமுலகேழுமேழுமாவருணைநாதர்சாபாலவாரமே .... (௯௭)

(வண்டோச்சிமருங்கணைதல்-அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

காரிலங்குமறைமுடிவினடித்தருணுமருணேசர்தமதுநாட்டில்.........*
நாரியர்மேன்மனமகிழுமளியிவங்காமொருவார்த்தைநவிலக்கேளீர் *
ஏரிருக்குங்கைதையெலஞ்சோரிருக்கநீரிருக்குமிடங்கடோறும்.........*
வேரிமலர்த்தேனிருக்கவிவர்கூழைவிருப்பிவந்தென்விழுவதீரோ (௯௮)

(தலைவியவயவவருமைசொல்லல்-அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.)

எமநெறிஞ்சிலையைத்தபெருமானருணகிரியிறைவர்நாட்டிற்... ... *
குமணமண்டபத்துறையுமடந்தையிடையெழுகவென்றூற்றலைவனே *
மாமுயற்கொம்பினிலறிவிசும்பலரைப்பறித்துமுனம்வடிவிலாதோன்
ஆமைமயிர்க்கயிறுகொடுதொடுத்தணிந்தப்புதுமையினுமருமையாமே .. ()

(தலைவிவகையுறைபேற்றமைசொல்லல் - கட்டளைக்கலிப்பா.)

ஆர்வலர்க்கழியாவரநல்குவாரத்தனாருணபுரிவெற்பரோ.................*
பார்வியப்புறநீர்தருமாமணிபட்டபாடுபகர்ந்திடலாகுமோ..........*
கார்குழற்குமுடிமணியாயிருகண்கண்மீதுறுகண்மணியாய்முலை ......*
சேர்தலுற்றபொழுதிருகுப்பிலுஞ்செஞ்றலாவுந்திணமணியானதே (௱)

திருவருணைகலம்பகம்-முற்றிற்று.